FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
C 8066949

1. District மாவட்டம் : கடலூர் PS: காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு: 2019 FIR No.: மு.த.அ. எண்: 11/2019 Date: நாள்: 23.10.2019

2. (i) Act சட்டம்: CRPC Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: The prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7.
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22.10.19 13.30 hrs Date to : நாள் வரை 22.10.19 20.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.10.19 Time : நேரம் 12.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.10.19 Time : நேரம் 12.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 6 km. தென்மேற்கு.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ. அமுதா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் உதவி ஆய்வுக்குழு அலுவலர். (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) C. சரவணன், வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர்
2) P. பாலசுப்ரமணி, நேர்முக உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர்
3) U. காமாட்சி, பதிவறை எழுத்தர், RTO office, கடலூர். (4) மணிவண்ணன் (35) (தனியார்) S/o சண்முகசுந்தரம் 2/66, தெற்குதெரு, வண்ணாரந்தல், கவீசம், விருத்தாசலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 23.10.2019 ந்தேதி பகல் 12.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, நாள் : 23.10.2019, அனுப்புநர், அ. அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர், கடலூர் மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர்

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Amuth 23.10.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

S. Mala 23/10/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.10.19 at 13.00 hrs.

Name: பெயர் S. MALA
Rank: நிலை ....................No. எண் .........
Inspector of police,
V&AC., Cuddalore.

ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) உதவி ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய நான் எனது அலுவலகத்தில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலின் படி கடலூர் மாவட்டம், கடலூர் கேப்பர் மலையில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள், மற்றும் புரோக்கர்கள் போன்று செயல்படும் வெளிநபர்கள் இன்று 22.10.2019 வட்டார போக்குவரத்து அலுவலக வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சரவணன் மற்றும் அலுவலக ஊழியர்களை சந்தித்து, தீபாவளி பண்டிகை தொடர்பாக மரியாதை நிமித்தமாக சந்தித்து பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 12.00 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த ஆய்வாளர் S. மாலா அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு மதியம் சுமார் 1.00 மணிக்கு சென்றால் அங்கு டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள் மற்றும் புரோக்கர்களாக செயல்படும் வெளிநபர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கொடுத்திருந்த பணத்தை ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், ஆய்வாளர் மாலா மற்றும் அவரது காவல் குழுவினர்களும் பகல் 12.30 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு கடலூர் கேப்பர் மலையில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை கண்காணித்து மதியம் சுமார் 1.00 மணிக்கு கிழக்கு பார்த்து அமைந்து இருக்கும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது என்னுடன் வந்த ஆய்வாளரையும் அவரது காவல் குழுவினரையும் கண்ட சிலர் பயந்து கொண்டு அலுவலகத்தை விட்டு ஓட தொடங்கினர். அப்போது ஆய்வாளர் அலுவலகத்தின் முகப்பு வாசல் கேட்டை மூடினார். அப்போது என்னுடன் வந்த ஆய்வாளர், அலுவலகத்தில் இருந்து பயந்து ஓடி வந்தவர்களை, அலுவலகத்தின் முன் ஹாலில் உட்கார வைத்துவிட்டு, பாதுகாப்பிற்கு காவலர்களை நியமித்தார். நானும், ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் ஹாலுக்கு மேற்கே உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர் இருந்த அறைக்கு, நான் ஆய்வாளருடன் சென்று அந்த அறையில் அமர்ந்திருந்த நபரிடம் என்னையும், ஆய்வாளரையும் மற்றும் காவல் குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டோம். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது தன் பெயர் C.சரவணன் வயது 55, த/பெ சின்னு, வட்டார போக்குவரத்து அலுவலர், கடலூர் என்றும் முகவரி C/3, Moon shadow Chamber,

சொடாம்பிகை நகர், திருப்பாபுலியூர், கடலூர், நிரந்தர முகவரி A1, Diva Englave, PRP 3வது ரு, பெரியபுத்தூர், சேலம் -16 என அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்து, அவர் முன்னிலையில் நானும், எனது அறிவுரையின்படி ஆய்வாளர் மாலா மற்றும் காவல் குழுவினருடன் சுயபரிசோதனை செய்துகாண்பித்து எங்களிடம் பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். பின்னர், வட்டார போக்குவரத்து அலுவலர் அவரது அறையை சோதனை செய்ய அதில் பணம் எதுவும் இல்லை. பின்னர் அலுவலகத்தின் வடக்கே உள்ள அலுவலக அறையை சோதனை செய்ய சென்றபோது, அந்த அறையில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் D.சிவக்குமார், வயது 52, த/பெ தட்சணாமூர்த்தி, E10, பாரத் நகர், கோண்டூர், கடலூர் என முகவரி சொல்லியும், தான் C பிரிவு கண்காணிப்பாளராக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் C பிரிவில் மேற்கொள்ளப்படும் அலுவல்களை மேற்பார்வை செய்வது தனது பணி என தெரிவித்தார். அவருக்கு வலதுபுறம் இருந்த கேபினை சோதனை செய்ய சென்போது, அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்த நபர் எங்களை கண்டதும், லஞ்ச ஒழிப்பு பிரிவினர் என அடையாளம் கண்டு பதற்றத்துடன் எழுந்து எங்கள் சோதனையிலிருந்து தப்பித்து ஓட முயற்சி செய்து எதிரே இருந்த ரேக்கில் மோதி கீழே விழுந்தவரை நான், எழச்செய்து ஆசுவாசப்படுத்தி அவரை விசாரிக்க தனது பெயர் மணிவண்ணன், வயது 35, த/பெ சண்முகசுந்தரம், நெ.2/66, தெற்கு தெரு, வண்ணாதூர் நல்லூர், விருத்தாசலம் என தெரிவித்தார். மேலும் நான் அவரை விசாரிக்க, தான் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தபால் தொடர்பான அலுவல்களை செய்து வருவதாகவும், தான் அரசு ஊழியர் இல்லை எனவும், தான் வேலை செய்வதற்கு ஊதியத்தை வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்குவார் என தெரிவித்தார். அவரை திரேக சோதனை செய்ய அவரது சட்டை பாட்கெட்டில் Tamilnadu State Transport Corporation Viluppuram Ltd., Villupuram Region என்ற தலைப்பெழுத்தில் அவரது பெயரில் புகைப்படத்துடன் கூடிய பஸ் பாஸ் இருந்தது. அதுகுறித்து அவரிடம் கேட்க, இதற்கு முன்பு பணிபுரிந்த மோட்டார் வாகன ஆய்வாளர் மாணிக்கம் என்பவர் தனக்கு இந்த பஸ் பாஸ் வாங்கிக்கொடுத்ததாக தெரிவித்தார். மேலும் பேன்ட் பாக்கெட்டில் ரூ.10000/– (500 x 20) மற்றும் இரண்டு துண்டு சீட்டுகள் இருந்தன. அந்த துண்டு சீட்டுகளில் பலரது பெயர்கள் எழுதப்பட்டு அந்த பெயர்களுக்கு நேர் எதிரில் தொகைகள் பேனாவால் எழுதப்பட்டிருந்தன. மேற்படி துண்டு சீட்டுகள் மற்றும் பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, புரோக்கர்கள் RTO விற்கு கொடுப்பதற்காக கொடுத்த பணம் என்றும், புரோக்கர்கள் பணம் கொடுத்ததற்கான விவரங்களை குறிப்பு சீட்டாக எழுதிவைத்துள்ளதாக தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.10,000/– மற்றும் துண்டு சீட்டுகள் மற்றும் பஸ் பாஸ் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதே கேபினில் உள்ள நபரை பற்றி விசாரிக்க தனது

பெயர், V.காமாட்சி வயது 33, க/பெ. வெங்கடேசன், நெ.230, மேற்கு தெரு, எறும்பனூர், விருத்தாசலம் என்றும், தான் பதிவரை எழுத்தராக பணிபுரிந்து வருவாகவும், தபால் தொடர்பான பணிகள் மற்றும் பதிவரையில் பராமரிக்கப்படும் ஆவணங்கள் தொடர்பான பணிகளை செய்து வருவதாகவும், இப்பிரிவு தபால் பிரிவு எனவும் தெரிவித்தார். அந்த கேபினில் இருந்த மரபீரோவினை சோதனை செய்ய அதில் மேல் தட்டில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு அடியில் பணம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அதனை எண்ணிப்பார்க்க ரூ.4,350/– (500x3, 100 x 21, 50 x 10, 20 x 6, 10 x 13) இருந்தது. மேற்படி பணம் குறித்து காமாட்சியிடம் விசாரிக்க , அந்த பணம் அந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். மேற்படி பணம் லஞ்சப்பணமாக பெற்றிருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. கண்காணிப்பாளருக்கு எதிர்புறம் நான்கு கேபின்கள் இருந்தன. அதில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, தனது பெயர், S. சீனிவாசன், வயது 43, த/பெ. சத்திய நாராயண மூர்த்தி, நெ.12, VKA, நகர், அம்மாபேட்டை, சிதம்பரம் என்றும், தான் C5 பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரிவதாகவும், தான் பேட்ஜ் உரிமம் தொடர்பான பணிகளை செய்வதாக தெரிவித்தார். அவருக்கருகில் இருந்த இரும்பு பிரோவை சோதனை செய்ய அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. பணம் எதுவும் இல்லை. அவருக்கு கிழக்கே உள்ள கேபினில் உள்ள கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, தனது பெயர், R. ரவிசங்கர், வயது 43, த/பெ. ராதாகிருஷ்ணன், நெ.41, சரவணா நகர், திருப்பாபுலியூர், கடலூர் என்றும், தான் B3 பிரிவில் உதவியாளராக பணிபுரிவதாகவும், தான் தேசிய அனுமதி சீட்டு வழங்குதல், அலுவலக பணி அமைப்பு தொடர்பான பணிகளை செய்வதாக தெரிவித்தார். அவருக்கருகில் இருந்த இரும்பு பிரோவை சோதனை செய்ய அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. பணம் எதுவும் இல்லை. அவருக்கு கிழக்கே உள்ள கேபினில் உள்ள கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, தனது பெயர், R. கவிதா, வயது 42, க/பெ. குணசேகரன், நெ.19, நெசனூர் சாலை நெல்லிக்குப்பம் என்றும், தான் C3 பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரிவதாகவும், தான் ஓட்டுநர் உரிமம் வழங்குவது தொடர்பான பணிகளை செய்வதாக தெரிவித்தார். அவரது அறையில் இருந்த மர பெட்டியை சோதனை செய்ய அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. பணம் எதுவும் இல்லை. அவருக்கு கிழக்கே உள்ள கேபினில் உள்ள கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, தனது பெயர், V. ரபியா ஜெயவாணி, வயது 39, க/பெ. நாகராஜன், நெ.9, புதுத்தெரு, எல்லைகிராமம், புதுப்பேட்டை என்றும், தான் C2 பிரிவில் உதவியாளராக பணிபுரிவதாகவும், தான் சரக்கு வாகனங்களுக்கு அனுமதி வழங்குவது மற்றும் உரிமம் இரத்து செய்வது தொடர்பான பணிகளை செய்வதாக தெரிவித்தார். அவரது அறையில் இருந்த இரண்டு இரும்பு பீரோக்களை சோதனை செய்ய அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

பணம் எதுவும் இல்லை. பின்னர் கண்காணிப்பாளருக்கு இடதுபுறம் கிழக்கு பார்த்து இருந்த அறையில் பழைய கணினிகள் மற்றும் பழைய ஆவணங்கள் இருந்தன. அதற்கு அடுத்து இருந்த கணினி அறையில் சர்வர் இணைப்புகள் இருந்தன. பின்னர், RTO அலுவலக அறையின் தெற்குபுறம் இருந்த வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் அறையில் இருந்த நபரை விசாரிக்க தனது பெயர் P.பாலசுப்ரமணி, வயது 55, த/பெ பிச்சை, வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் என்றும், தற்காலிகமாக 23, வெங்கடேசன் காலனி, திருப்பாபுலியூர், கடலூர் என்றும், நிரந்தர முகவரி 669, பசும்பொன் தெரு, வத்தலகுண்டு, திண்டுக்கல் மாவட்டம் என தெரிவித்தார். மேற்சொன்ன நேர்முக உதவியாளர் அறையை சோதனையிட, அறையில் இருந்த மர கதவு பொருத்தப்பட்ட சிமெண்ட் சிலாபை சோதனை செய்ய, அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அதில் மேல் அடுக்கில் ஆவணங்களுக்கு இடையில் பணம் இருந்தது, அந்த பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.10000/– (500x7, 200x10, 100x36, 50x18) இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக பாலசுப்ரமணியிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். உடன் மேற்படி பணம் ரூ.10,000/– லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்னர் நேர்முக உதவியாளர் அறைக்கு எதிரில் அலுமினிய தகடுகளால் தடுப்பு ஏற்படுத்தி நுழைவுவாயிலுடன் இருந்த, பெரிய ஹால் இருந்தது. அந்த ஹாலின் இடதுபுறத்தில் நீண்ட மர ரேக்குகளில் ஆவணங்கள் அடுக்கப்பட்டிருந்தது. அந்த மர ரேக்குகளில் உள்ள ஆவணங்களை மற்றும் ரேக்குகளை சோதனை செய்ய அதில் பணம் எதுவும் இல்லை. மேற்படி ஹாலில் வடக்கு பார்த்து Computer, Printer உடன் நாற்காலியில் அமர்ந்து இருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் S.வேலாயுதம், வயது 41 த/பெ சிங்காரவேலு, நெ.16, கல்யாணராமபுரம் புதுக்கோட்டை என முகவரி தெரிவித்து தான் A-5 Assistant ஆக பணிபுரிவதாகவும் தொவித்தார். தான் பேருந்து, சிற்றுந்து, ஆம்னி பேருந்து தொடர்பான பணிகளை செய்வதாகவும் தெரிவித்தார். அவரது டேபிளின் டிராயரில் டேபிளை சோதனை செய்துபார்க்க அதில் பணம் எதுவும் இல்லை. மேற்படி ஹாலில் அடுத்து வடக்கு பார்த்து Computer உடன் நாற்காலியில் அமர்ந்து இருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் R.இளங்கோவன், வயது 55, த/பெ ராஜகோபாலன், நெ.4A/6A1, பாரதி தெரு, போளூர் ரோடு, திருவண்ணாமலை என முகவரி சொல்லியும், தான் A-2 Assistant ஆக பணிபுரிவதாகவும் கூடுதல் பொறுப்பாக A3 Assistant பணிகளை செய்து வருவதாக சொன்னார். தான் ஆட்டோ ரிக்ஷா மற்றும் போக்குவரத்து அனுமதி இல்லா வாகனங்கள் தொடர்பான பணிகளை செய்வதாகவும் சொன்னார். அவரது டேபிளின் டிராயரில் டேபிளை சோதனை செய்துபார்க்க அதில் பணம் எதுவும் இல்லை. மேற்படி ஹாலில் அடுத்து வடக்கு பார்த்து Computer உடன் நாற்காலியில் அமர்ந்து இருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் D.மாலதி, வயது 30, த/பெ

துறைகண்ணு, நெ.11B, மாரியம்மன் கோயில் தெரு, தட்டாம்பாளையம், பண்ருட்டி தாலுக்கா என முகவரி சொல்லியும், தான் A-4 Junior Assistant ஆக பணிபுரிவதாகவும் கூடுதல் பொறுப்பாக B1 Assistant பணிகளை செய்துவருவதாக சொன்னார். தான் சுற்றுலா சீருந்து அனுமதி வழங்கவது தொடர்பான பணிகளையும், பள்ளி கல்வி வாகனம் மற்றும் தனியார் சேவை வாகனங்கள் தொடர்பான பணிகளை செய்வதாகவும் சொன்னார். அவரது இரும்பு பீரோவை சோதனை செய்து பார்க்க அதில் ஆவணங்களை அடுக்கிவைக்கப்பட்டிருந்தது, பணம் எதுவும் இல்லை. மேற்படி ஹாலில் அடுத்து கிழக்கு பார்த்து Computer, Printer உடன் நாற்காலியில் அமர்ந்து இருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் E.சுமதி, வயது 25, த/பெ ஏழுமலை, நெ.4/18, கல்லூரி ஆசிரியர் நகர், உண்ணாமலை செட்டி சாவடி, கடலூர் என முகவரி சொல்லியும், தான் Typist ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர் அலுவலகங்கள் தொடர்பான தபால்களை கனிணியில் அடித்து கொடுப்பது எனது அலுவல் என தெரிவித்தார். அவருக்கு அருகில் இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்ததில், அதில் ஆவணங்களை அடுக்கி வைக்கப்பட்டிருந்தது, அதில் பணம் எதுவும் இல்லை. மேற்படி ஹாலில் அடுத்து கிழக்கு பார்த்து Computer உடன் நாற்காலியில் அமர்ந்து இருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் M.சக்திவேல், வயது 57 த/பெ மனோகரன், நெ.5, ராஜா நகர் விரிவாக்கம், ராகவன்பேட்டை, விழுப்புரம் என முகவரி சொல்லியும், தான் கண்காணிப்பாளராக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் கனரக வாகனங்களுக்கான தேசிய அனுமதி சீட்டு வழங்குதல், Maxi cab வாகனங்களுக்கு அனுமதி சீட்டு வழங்குதல், அனைத்து புதிய வாகனங்களுக்கான பதிவுகள் போன்ற பணிகளை (B பிரிவு) கண்காணித்தல் எனது பணிகள் என தெரிவித்தார். அவரது டேபிளின் டிராயரில் டேபிளை சோதனை செய்துபார்க்க அதில் பணம் எதுவும் இல்லை. பின்னர் அந்த ஹாலுடன் இணைந்த மேற்குபுறத்தில் இருந்த அறையில் கிழக்கு பார்த்து Computer, Printer உடன் நாற்காளியில் அமர்ந்த நபரை விசாரித்தபோது, தனது பெயர் S.ராஜசெல்வி, வயது 47, த/பெ. சுப்ரமணியம், நெ.3, பிள்ளையார் கோயில் தெரு, பண்ருட்டி ரோடு, வடலூர் என்றும், தான் B-4, Assistant ஆக பணிபுரிவதாகவும், Maxi cab அனுமதி தொடர்பான பணிகளை கவணித்து வருவதாகவும் தெரிவித்தார். அவருக்கு பின்புறம் இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்து பார்க்க ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. பணம் எதுவும் இல்லை. அதற்கு பின்புறம், வடக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் V.ரவிக்குமார், வயது 39, த/பெ வெங்கடேசன், 41, வடக்கு தெரு, எறும்பூர் மற்றும் அஞ்சல், புவனகிரி தாலுக்கா தான் B-2 Assistant ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் புதிய வாகனங்கள் பதிவு தொடர்பான பணிகள் செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவருக்கு அருகில் இருந்த இரும்பு பீரோவை

சோதனை செய்து பார்க்க அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன, பணம் எதுவும் இல்லை. மேற்படி B-2 Assistant க்கு எதிர் உள்ள சிமெண்ட் சிலாப்புடன் கூடிய செல்ப்பில் ஆவணங்கள் பகுதி பகுதியாக அடுக்கப்பட்டிருந்தது. அதனை சோதனை செய்ய, நடு பகுதியில் ஆவணங்களுக்கு இடையில் பணம் வைக்கப்பட்டிருந்தது. அந்த பணத்தை எண்ணிப்பார்க்க, ரூ.40,000/– (2000x9, 500x42, 200x5) இருந்தது. இந்த பணம் தொடர்பாக அங்கிருந்த பணியாளர்களிடம் விசாரணை செய்ய, அந்த பணம் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். மேற்படி பணம் லஞ்சமாக பெறப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி B-2 Assistant க்கு எதிரே கிழக்கு பார்த்து இருந்த அறையில் கணக்கர் அறை, இ1 இருக்கை என எழுதப்பட்டிருந்தது. அந்த அறையில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் K.ராஜேந்திரன், வயது 39, த/பெ குஞ்சிதபாதம், 156A,போடிசெட்டி தெரு, திருப்பாபுலியூர், கடலூர் என்றும், தான் Accountant ஆக இவ்வலுவலகத்தில் பணிபுரிவதாகவும் சொன்னார். தான், அலுவலகத்தில் பணிபுரிவர்களுக்கு ஊதியம் தொடர்பான பணிகள் மற்றும், இணக்க கட்டணத்தை வங்கியில் செலுத்துதல் மற்றும் வங்கி வரைவுகளை அரசு கணக்கில் செலுத்துவது போன்றவைகள் எனது பணிகள் என கூறினார். அவருக்கு அருகில் இருந்த சிமெண்ட் சிலாப்புடன் கூடிய செல்ப்பில் ஆவணங்கள் அடுக்கப்பட்டிருந்தது. அதற்கு அருகில் இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்து பார்க்க அதில், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவது தொடர்பான ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. பீரோவில் பாதுகாப்பு பெட்டக வசதி இருந்தது. அதனை திறந்து சோதனையிட அதில் பணம் இருந்தது. அப்பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.3,975/– இருந்தது. அவரிடம் இப்பணம் குறித்து விவரம் கேட்க, இன்று அலுவலகத்தில் கட்டப்பட்ட இணக்க கட்டணம் ரூ.3825/– மற்றும் நிலை முன்பணம் ரூ.100/–, ஒரு சதவிகித வரி ரூ.50/– என தெரிவித்தார், அதற்குரிய cash book ஐ பார்க்க நேற்றைய கணக்கு முடிப்பில் ரூ.775/–ம் இன்று வசூல் செய்யப்பட்ட இணக்க கட்டணம் ரூ.3200/–க்கன வங்கி செலானில் விவரம் பதிவாகி இருந்தது. அப்பணத்தை விசாரணைக்கு பின் அரசு பணம் என்பதால் ராஜேந்திரன் வசம் ஒப்படைத்தேன். மேற்படி கணக்கர் அறைக்கு எதிரில் இருந்த இரும்பு செல்பில் இருந்த ஆவணங்களை சோதனை செய்ய, கீழ் அடுக்கில் ஆவணங்களுக்கு இடையில் பணம் இருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.41,600/– (2000x4, 500x45, 200x19,100x57, 50x 10, 20x27, 10x56) இருந்தது. அப்பணம் பற்றி அங்கிருந்த பணியாளர்களிடம் விசாரிக்க அந்த பணம் அங்கு எப்படி வந்தது என தனக்கு தெரியாது என தெரிவித்தனர். மேற்படி பணம் லஞ்சமாக பெறப்பட்டு வைக்கப்பட்டிருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், முதல் தளத்திற்கு சென்றபோது இடது புறத்தில் கிழக்கு பார்த்து இருந்த அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் என எழுத்தப்பட்டிருந்தது.

அந்த அறையில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, அவரைப்பற்றி விசாரிக்க தனது பெயர் A.சோமசுந்தரம், வயது 54, த/பெ. அழகர்சாமி, நெ.12,ஸ்ரீ தேவி தெரு, திருப்பாதிரிப்புரியூர், கடலூர் என்றும், நிறந்தர முகவரி நெ.88, நேதாஜி ரோடு, மதுரை என தெரிவித்தார். அவருடைய மேஜை மற்றும் அவரது அறையில் இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்ய அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அவைகளை சோதனை செய்து பார்க்க பணம் எதுவும் இல்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு அருகில் வடக்கு பார்த்து இருந்த பதிவு அறையை (Record Room) சோதனை செய்ததில் ஆவணங்கள் இருந்தது, ஆவணங்களை சோதனை செய்ததில் பணம் எதுவும் இல்லை. அதனை தொடர்ந்து பதிவு அறைக்கு (Record Room) எதிரில் தெற்கு பார்த்து இருந்த அறையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் B.சசிகலா, வயது 29, க/பெ பால்ராஜ், 46/52, பிள்ளையார் கோவில் தெரு, வன்னியர்பாளையம், கடலூர் என்றும் தான் Data entry operator ஆக பணிபுரிகிறேன் என தெரிவித்தார். அந்த அறையை சோதனை செய்ததில் ஆவணங்கள் இருந்தது, ஆவணங்களை சோதனை செய்ததில் பணம் எதுவும் இல்லை. பின்னர் Data entry operator இருந்த அறையின் பின்புறத்தில் கிழக்குபுறம் பார்த்து உள்ள அறையில் அமர்ந்திருந்த நபர்களை பற்றி விசாரிக்க 1) S.துரைராஜ், வயது 45, த/பெ சுப்புராயலு, 15,நடுத்தெரு, விலங்கல்பட்டு, வானமாதேவி அஞ்சல், கடலூர், 2) N.ஜெயபிரகாஷ், வயது 43, த/பெ நாராயணன், 24,சங்கர நாயுடு தெரு, திருப்பாபுலியூர், கடலூர் என்றும் தெரிவித்தார்கள். அவர்களிடம் பணி பற்றி விசாரிக்க ஓட்டுனர் உரிமத்திற்கு விண்ணப்பித்த நபர்களை போட்டோ எடுப்பது எங்கள் பணி என தெரிவித்தனர். மேலும் அவர்கள், Bonton Software Solutions Private Limited மூலம் ஒப்பந்த பணி செய்து வருவதாக தெரிவித்தார்கள். அவ்வறை சோதனை செய்ய ஆவணங்களை தவிர பணம் எதுவும் இல்லை. அதனை தொடர்ந்து அலுவலகத்தில் இருந்த 1) வருகை பதிவேடு – 2019, வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர் (பக்கம் 1 முதல் 125 வரை), 2) ஒப்பந்தப்பணியாளர் பதிவேடு – 2019, வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர் (பக்கம் 1 முதல் 117 வரை), 3) அலுவலக ஊழியர் பண இருப்பு பதிவேடு 1 முதல் 579 பக்கங்கள் (இதில் பக்கம் 387ல் தேதி 22.10.2019 ல் காணப்பட்ட அலுவலக ஊழியர்களின் அவரவர்களுக்குரிய தொகைகளை இந்த பதிவேட்டில் உள்ளவாறு சரிபார்க்கப்பட்டு, பின்னர் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்சொன்ன வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சோதனைக்கு நான் மற்றும் காவல் குழுவினருடன் அலுவலகத்தில் நுழைந்து அங்கிருந்தவர்களை விசாரணைக்காக சுற்றி வளைக்க எத்தனைத்த போது, அலுவலகத்தினுள் இருந்த சிலர் முட்டி அடித்து கொண்டு, அலுவலகத்தை விட்டு வெளியேற முயற்சித்து, மாடி படியில் இருந்து இறங்கும் போது, பிறதான படியில் இருந்து வெளியேறும் போது உருண்டு பிறண்டும், எங்களது சோதனைக்கு உட்படாமல்

வெளியேறினார்கள். மேற்கண்ட சோதனையின் போது மொத்தம் ரூ.1,05,950/– கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது தொடர்பாக வட்டார போக்குவரத்து அலுவலரிடம் தெரிவித்து விளக்கம் கேட்டபோது, மேற்படி பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்தார். இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மதியம் சுமார் 1.30 மணி முதல் இரவு சுமார் 08.00 மணி வரை பதிவு செய்யப்பட்டது. மேற்படி சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. அவைகளை இருந்த நிலையிலேயே வைக்கப்பட்டது. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. இன்று 23.10.2019ந் தேதி பகல் 12.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து, 22.10.2019ந்தேதி கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,05,950/–, திரு.மணிவண்ணன், த/பெ சண்முகசுந்தரம், நெ.2/66, தெற்கு தெரு, வண்ணாதூர் நல்லூர், விருத்தாசலம் என்பவரின் வாக்குமூலம் மற்றும் திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, (கையொப்பம்), (அ.அமுதா). அய்யா, நான் இன்று 23.10.2019 பகல் 12.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2019, சட்டபிரிவு 102 குற்றவியல் நடைமுறை சட்டம் மற்றும் சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988, ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கணம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

S. [signature]
23/10/19.
Inspector of police,
ஊதகப, கடலூர்.,